மாண்புமிகு உறுப்பினர்கள் லாபியில் நின்று கொண்டு கோஷமிடுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) லாபியில் நின்று கொண்டு கோஷமிடுவது முறையல்ல. 'வெளிநடப்புச் செய்கிறேன்' என்று சொல்லிவிட்டுச் சென்றீர்கள். வெளிநடப்புச் செய்ய வேண்டும். (குறுக்கீடுகள்) லாபியில் நின்று சத்தம் போடும் மாண்புமிகு உறுப்பினர்கள், 'வெளிநடப்புச் செய்கிறோம்' என்று சொன்னீர்கள். நீங்கள் அமைதியாக வெளிநடப்புதான் செய்ய வேண்டும். லாபியிலே நின்று கொண்டு அவையை நடத்துவதற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடாது. நான் அதை வன்மையாகக் கண்டிக்கிறேன். வெளிநடப்பு என்றால், நீங்கள் தாராளமாக வெளிநடப்புச் செய்யலாம். வெளியே போய் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால், இங்கு லாபியிலே நின்று கொண்டு, நான் அவையை நடத்துவதற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடாது என நான் அவர்களை எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. கார்த்திக், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது ஒன்றும் இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. தமிமுன் அன்சாரி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுசம்பந்தமாக விளக்கம் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விளக்கமாகக் குறிப்பிட்டேன். இதுகுறித்து உச்ச நீதிமன்றத்திலும், சென்னை உயர் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர்ந்து, வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வழக்கின்மீது உச்ச நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் என்ன தீர்ப்பு வழங்கப்படுகின்றதோ, அதை அரசு நடைமுறைப்படுத்தும் என்பதைத் தெளிவாக அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(குறுக்கீடுகள்)*

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(ஆ) கோயம்புத்தூர், காந்திபுரம் இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி அலுவலகம்மீது பெட்ரோல் குண்டு வீச்சு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கார்த்திக், என்ன? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.*

2017 ஜூன் 20]

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரம், காந்திபுரம் பகுதியில் நூறு அடி சாலையிலுள்ள இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியினுடைய மாவட்டக் குழு அலுவலகம் மீது கடந்த 17-6-2017 அன்று பெட்ரோல் குண்டு வீசப்பட்டுள்ளது. இரு சக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் பெட்ரோல் குண்டு வீசியதால் மார்க்சிஸ்ட் கட்சியின் அலுவலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மற்றும் அந்த அலுவலகத்தின் ஜன்னல் பகுதிகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன. தமிழ்நாட்டில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பது அரசின் கடமை. கோவையில் நடைபெற்றுள்ள இந்தச் சம்பவம் குறித்து. . .*

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கார்த்திக், நீங்கள் கவனத்தை ஈர்த்துவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தகவல் கோரல் என்ற முறையில்தான் நான் உங்களை அனுமதித்திருக்கிறேன். நீங்கள் விளக்கமாகப் பேசவேண்டாம். (குறுக்கீடுகள்)*

திரு. நா. கார்த்திக்: *சரி. இதுபோன்ற சம்பவங்களை. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. டி.ஆர்.பி. ராஜா, நீங்கள் பேசாமல் இருங்கள். நான் அவரைப் பார்த்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, நீங்கள் என்னைப் பாருங்கள். நான் அவரைப் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) திரு. கார்த்திக், சொல்லுங்கள்.*

திரு. நா. கார்த்திக்: *இந்தச் சம்பவம் குறித்து கோவை மாநகர காவல் துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க தமிழக அரசும், காவல் துறையும் விரைந்து செயல்பட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரம், இரத்தினபுரி காவல் நிலைய சரகம், காந்திபுரம் 2 ஆம் விரிவு என்ற முகவரியில்*

இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி கோவை மாவட்ட குழு அலுவலகம் இயங்கி வருகிறது. அந்த அலுவலகத்தில் திரு. ஆனந்தன் என்பவர் முழுநேர ஊழியராகவும், ஓட்டுநராகவும் பணிபுரிந்து வருகிறார். கடந்த 17-6-2017 அன்று காலை வழக்கம்போல் திரு. ஆனந்தன் நடைபயிற்சிக்குச் சென்றுவிட்டு 7-00 மணியளவில் கட்சி அலுவலகம் வந்தபோது தீப் பற்றி எரிந்தது போன்ற வாசனையை உணர்ந்திருக்கின்றார். அவர் அலுவலக வளாகத்திற்குள் சென்று பார்த்தபோது அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் வலது பக்கக் கதவுகளில் கரும்புகை படிந்திருந்ததையும், அதேபோன்று அலுவலக ஜன்னல் ஒன்றில் கரும்புகை படிந்திருந்ததையும் பார்த்துள்ளார். மேலும் கீழே மண்ணெண்ணெய் வாசனையுடன் கூடிய ஒரு கண்ணாடி பாட்டில் மற்றும் கருகிய நிலையில் பெட்ரோல் வாசனையுடன்கூடிய ஒரு பிளாஸ்டிக் பாட்டில் கிடந்ததையும் பார்த்துள்ளார். இது தொடர்பாக திரு. ஆனந்தன் இரத்தினபுரி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில் குற்ற எண் 480/2017, சட்டப் பிரிவுகள் 435 இ.த.ச. மற்றும் பிரிவு 3, இந்திய வெடி பொருட்கள் சட்டம், 1908-ன்கீழ், வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு உடனடியாகச் சென்று, தடய அறிவியல் நிபுணர் குழுவினரையும், துப்பறியும் மோப்ப நாய் பிரிவினரையும் மற்றும் வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயல் இழக்கச் செய்யும் குழுவினரையும் அங்கு வரவழைத்து தடயங்களைக் கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர். இது தொடர்பாக காவல் துறையினர் 3 தனிப் படைகள் அமைத்து, எதிரிகளைக் கண்டுபிடித்து கைது செய்ய பல்வேறு கோணங்களில் தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முனைவர் கோவி. செழியன், என்ன ? இரண்டு நாட்களாக இதையே கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒரே நிமிடம். அவ்வளவுதான். ஆனால், அமைச்சரிடம் நீங்கள் பதில் எதிர்பார்க்கக்கூடாது. ஏனென்றால் நான் அமைச்சரிடம் எதுவும் தெரிவிக்கவில்லை.